கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 25.08.2022 அ.வ.எண். 1/2017 வா.சா.1 திருமலைசாமிகவுண்டர்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் 2ம் வாதி மயிலாத்தாளுக்காக வழக்கு நடத்துவதற்கு தாக்கல் செய்த வா.சா.ஆ.9 அதிகார ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ளபடி திப்பம்பட்டி கிராமத்தில் புலஎண் 176 ல் கண்ட 2 ஏக்கர் 45 செண்ட் நிலம் கிரையம் செய்யப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தின்படி கிரையம் பெற்ற ரங்காத்தாளின் எனது தகப்பனாரின் தாயார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரையம் நடைபெற்ற விபரம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான்.

அந்த பூமியை எனது பாட்டி ரங்காத்தாள் அளவீடு செய்து கிரையம் பெற்றாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பி அட்டவணை சொத்தை பொறுத்து ரங்காத்தாள் பெயரில் பட்டா, சிட்டா எதுவும் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ரங்காத்தாள் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ரங்காத்தாளின் இறப்பு சான்று, வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.1 ஆவணப்படி எனது தகப்பனார் புலஎண் 175 ல் 2 ஏக்கர் 62 செண்ட் நிலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் கண்ட சொத்துக்களை எனது தகப்பனார் கிரையம் பெற்ற விபரம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். அதுபோல் எனது தகப்பனார் வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் கண்ட நிலத்தை அளவீடு செய்து வாங்கினாரா என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் ***" எழுதி வாங்கும் நபருக்கு மேற்படி திப்பம்பட்டி கிராமத்தில் வேறு பட்டா பூமி இல்லை "*** என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எத்தனை புல எண்களில் எவ்வளவு நிலத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 ஏக்கர் 75 செண்ட்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் எனது நிலத்தை ஆக்கிரமித்து பட்டா வாங்கியுள்ளார்கள் என்று வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான்.பிரதிவாதிகள் மோசடியாக பட்டா பெற்றுள்ளதாக சொல்லும் நிலையில் அதை ரத்து செய்ய மனு எதுவும் அதிகாரிகளிடம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்கில் சொல்லியுள்ள அளவைவிட குறைவான நிலம் தான் தற்போது நிலம் உள்ளது என்றால் சரிதான். எனது நிலத்தை அளப்பதற்கு நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

புலஎண் 175/2, 175/3 ஆகிய இரண்டு காலைகளிலும் சேர்த்து 2 ஏக்கர் நிலம் தான் எனக்கு சொந்தமாக உள்ளது என்றால் தவறு. வழக்கு பி அட்டவணை சொத்து எனக்கு சொந்தமானது இல்லை என்றும் பிரதிவாதிகளுக்கும், மற்றவர்களுக்கும் சொந்தமானது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் வழக்கு பி அட்டவணை சொத்து குறித்து வருவாய் ஆவணங்கள் எதுவும் எனது பெயரில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

2014ம் ஆண்டு 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் புலஎண்கள் 175, 176 ல் கண்ட நிலங்களை அவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக அனுப்பியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. பிரதிவாதிகளுக்கு சொந்தமான நிலங்கள் குறித்து ஆவணங்கள் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் கோரும் 5 ஏக்கர் 2 செண்ட் நிலம் எனக்கு சொந்தமாக எந்த காலத்திலும் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் மேற்படி 5 ஏக்கர் 2 செண்ட் நிலம் குறித்து வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணத்தை தவிர நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் எனது நிலத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும் எனது சுவாதீனத்தில் இடையூறு செய்யவில்லை என்றும் அவர்களுக்கு சொந்தமான நிலத்தை அவர்கள் அனுபவித்து

வருகிறார்கள் என்றும் ஆகவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)/- N.பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி